'எல்லா இனங்களும் இணைந்தன்பு கொள்வோம்.'

1434

# சமாதானம் 2

- மருதூர் வாணன் -

NMA

## SAMATHANAM - MARUTHOOR VAANAN



31/7/92

WEB : http\\www.thamizham.net

24 . 7 . 1992 - நண்பர்களுக்கு மட்டும் - ரூபா 10 . 00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானம் முகப்பினிலே

# பேரறிஞர் J. M. M. அப்துல்காதிர்

திருமணக் காட்சி, நூலினிலே 'நாயகத் திருமேனி' என்றும்
திகழ்மரபுக் குத்புநாயகம் காவியத்தைத் திறனாய்ந்தே
வருமழகுத் தமிழை வருணித்துத் தெளிவுரைத்தார்,
வளமார் இஸ்லாமியத் தமிழாராய்ச்சி வரலாற்றில்
திருப்புகழை எடுத்தபே ரறிஞர் J. M. M. அப்துல்காதிரின்
திருமுகத்தை '2ம் சமாதானம்' முகப்பினில் பொறித்து
நருமழகைத் தமிழ்பேசும் மக்களுக்காய்ச் சேவைசெய்த
தமிழறிஞர் பெருமைகளைத் தரணியெல்லாம் பாடுகிறோம்.

★

என்றன் 'பெருநாள்பரிசு' குறுநாவல் நூலுக்கும் (70ல்)
அணிந்துரை எழுதித்தந்து வளர்த்து விட்ட
என்னுறவினர், 'மைத்துனர் இஸைவாணர்,
என்று புகழிசைக்கும் நொத்தாரிஸ்,
பன்னூலாசிரியர், ஆசிரியர் சங்கத்தலைவர்,
பலகல் லூரிகளில் அதிபராயிருந்து சேவை செய்தார்,
என்னூரின் மூத்த எழுத்தாளர் J. M. M. அப்துல்காதிர்
என்றால் மிகையில்லை, என்றுபுகழ் பாடுகிறோம்.

★

## நூல் தேட்டம்

(இலங்கைத் தமிழ் நூல்கள் பற்றிய வழிகாட்டி)
ஆசிரியர் N. செல்வராஜா, (யாழ்ப்பாணம்)

## உண்மை உதயம் (இஸ்லாமியசஞ்சிகை)

ஆசிரியர் மௌலவி பாகில் முஸ்தபா மௌலானா

## அந் நுஸ்ரத்

'வறியவர் நலன்புரிச் சங்கம்'

ஆயுள்காலப் பொதுச் செயலாளர் ஈழக்குயில் இத்ரீஸ் அவர்கள் வெளியிட்ட 92ம் ஆண்டுக் கலண்டர் முகப்பினில், நெசவுக் கைத்தொழில் அமைச்சர் M. A. அப்துல்மஜீத் M. P. சம்மாந்துறை, அவர்களின் அழகியபடம் பிரசுரமாகியுள்ளது.





## ஆசிரியரிர் கருத்துக் குவியல்

# வறுமை ஒழிப்புத் தந்தை

## வள்ளல் ரணசிங்க பிரேமதாசாவே!

நிச்சயமாக 140 ஆசங்களை ஐக்கிய தேசியக் கட்சி வென்றெடுக்கும், ஆட்சி அமைக்கும், என்று 9-2-89ல் ஆருடம் கூறி, அதிமேதகு ஜனாதிபதி அவர்ளுகக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதி அனுப்பினோம்.

31-1-89ல் கல்முனை நகர் சந்தாங்கேணி மகாநாட்டுக்கு ஜனாதிபதியாக முதலில் வந்தவேளை, ''சமாதானம்'' முதலாம் இதழ் கொடுத்தோம். அல்ஹாஜ் A. H. M. அஸ்வர் M. P. அவர்களும், அல்ஹாஜ் S. Z. M. மசூர் மவ்லானா J. P. அவர்களும் என்னை ஜனாதிபதி அவர்களுக்கு அறிமுகம் செய்தார்கள்.

அதிமேதகு ஜனாதிபதி R. பிரேமதாச அவர்களும், ஏழைமக்களின் மண், ஓலைக் குடிசைகளை ஓட்டு வீடுகளாக்கியும், 15 லட்சம் பேர்களின் வறுமைகளை ஒழித்தார்கள், ஜனசக்தித் திட்டத்தின் மூலம் 25000, இருபத்தி ஐயாயிரம் ரூபாய்க்கு உணவுகளும், சுய தொழில் செய்வதற்குச் சேமிப்புத் திட்டமும் வழங்கி வருகிறார்கள், இலங்கை ஏழை மக்களுக்கு இறவாச் சேவை செய்துவரும், வறுமை ஒழிப்புத் தந்தை வள்ளல் பிரேமதாச அவர்களின் ஆயுள் நீடிக்கச் 'சமாதானம்' சஞ்சிகை மூலம் எல்லாம் வல்ல அல்லாவைப் பிரார்த்திக்கிறோம்.

**விடுதலைப் புலிகளின் கல்முனைச் சந்தாங்கேணிச் சமாதான மகாநாட்டில், 'சமாதானம்' ஆசிரியரின் உரையின் சாரம்:-**

இலங்கையிலுள்ள தமிழ் மொழிபேசும் சகல முஸ்லீம்களும், தமிழர், சிங்களவர் ஏனைய மக்களுடன் சகோதரர்ராகவும், சரிசமத்துவமாகவும் சமாதானமுமாகவே வாழ்ந்து வருகிறோம்.

தமிழரசுத் தந்தை அமரர் S. J. V. செல்வநாயகம் ஐயாவும் தமிழ் காங்கிரஸ் தலைவர் G. G. பொன்னம்பலம் ஐயா அவர்களும், முஸ்லீம்களைத் தங்கள் உடன் பிறப்புக்களாகவே, அரவணைத்து நேசித்து வாழ்ந்து அரசியலை வழி நடாத்தினார்கள். இந்த உண்மைகள் இந்தச் சமாதான மகாநாட்டுக்குப் பிரதம அதிதிகளாக இங்கு வந்திருக்கும், திரு. கரிகாலன் அவர்களுக்கும், திரு. யோகி அவர்களுக்கும் நன்கு தெரியும். உலகப் பயங்கரவாதி, சர்வாதிகாரி என வர்ணிக்கப்படும் ஹிட்லர், முசோலினி போன்றவர்கள் கூட, துப்பாக்கிப் போர் நடாத்தி 60 லட்சம் மக்களை ஐந்தாறு நாட்களில் கொன்று குவித்தார்களே தவிர, நல்ல பெயரெடுத்தார்களில்லை. மக்களை நேசித்து சமாதானமாகவே வாழ நாங்கள் ஆசைப்படுகிறோம்.

அன்றையச் சமாதான மகாநாட்டில், சமாதானம் இதழ்களை கரிகாலனுக்கும், யோகிக்கும் அன்பளிப்புச் செய்யப்பட்ட செய்திகளும் படமும் வீரகேசரியில் பிரசுரமானது. கல்முனை நிருபர் அருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானம் வளர அன்பளிப்புத் தந்தவர்கள்

அல்ஹாஜ். I. L. M. இஸ்மாயில் J. P. சீப்பலஸ், பெரிய நீலாவணை,
அல்ஹாஜ் M. A. முஸைகயதீன் பாவா, நூலக வீதி, மருதமுனை.
நபீல் றைஸ் மில்ஸ், பிரதானவீதி, பெரிய நீலாவணை.
இப்ஹாம் ஸ்டோர்ஸ், (கலைஞர் ஆரிபீன்) பெரிய நீலாவணை.
சிறாஜ், சென்றர், பிரதான வீதி, மருதமுனை.
டாக்டர் தோமஸ், செட்டியார் வீதி, பாண்டிருப்பு.
டாக்டர் ரவி, அல்மனார் வீதி, மருதமுனை.
டாக்டர் M.முருகேசுபிள்ளை, பிரதான வீதி, கல்முனை.
டாக்டர் K. வஸீகரன், மக்காமடி வீதி, மருதமுனை.
ஆயிஷா பேக்கரி டீறூம், பிரதான வீதி, மருதமுனை.
நவீம் பிரதர்ஸ், பிரதான வீதி, மருதமுனை.
K. B. சென்றர், பிரதான வீதி, மருதமுனை.
அல்ஹாஜ் A. M. இப்றாஹீம், சீப் சென்றர், பிரதான வீதி, மருதமுனை.
ஜனாப் M. M ஆப்தீன், சுப்பர் மார்க்கட், கல்முனை.
ஜனாப் M. T. M. மஜீத், சுப்பர் மார்க்கட், கல்முனை.
சஹிலா, மட்டுநகர் வீதி, கல்முனை.
ஜனாப் M. L. A. வாஹித் (புஹாரி) மார்க்கட், மருதமுனை.
ஜனாப் E. முனவ்வர்தீன், டீறூம், பள்ளியடி மார்க்கட், மருதமுனை.

## 2ம் சமாதானம்
### கல்முனையில் இனக் கலவரத்தினால் எரிந்த போது

இங்கே அரசியலில் தூய்மை இல்லை. இலக்கிய உலகிலும் தூய உள்ளங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. 60ல் தேன்மதி சஞ்சிகை ஆரம்பித்தேன். 70ல் கலைஞர் M. Y. M. மனாப் முகப்படம். 78ல் கவிச்சுடர் அன்பு முகையதீன் முகப்படம், 88ல் ஜூலை 1ம் சமாதானம், புலவர்மணி ஆ. மு சரிபுத்தீன், நாவலர் ஈழமேகம் இருவரினதும் முகப் படங்களைப் பிரசுரித்தோம். நாடெல்லாம் எதிராளிகளும் நல்லாதரவு தந்தனர்.

2ம் சமாதானம், கல்முனை ஆனந்தா அச்சக உரிமையாளர் R. செல்வச்சந்திரன், ரூபா அவர்களிடம் 3100 ரூபா பொருத்தத்தில் 2500 ரூபா முற்பணம் கொடுத்தேன். 16 பக்கம் அச்சாகி, மீதி, அட்டை 4 பக்கம் அச்சிடும் வேளையில், 23-4-89ல் கல்முனை நகரம் எரிந்து சாம்பராகிய வேளையிலே, ஆனந்தா அச்சகத்துள், 2ம் சமாதான மலரும் எரிந்து சாம்பராகியது. இதைக் கேள்விப்பட்ட, சதிகாரர்களும் அசுத்தக் கவிஞர்களும் அக்காலங்களில் 'சமாதானமா?' என்று ஏளனம் பேசியோரும் எரிந்து சாம்பராகினர்.



## சமாதானம் வெளியீட்டு விழாவினிலே....,

30-7-88ல், மருதமுனை அல்மனார் மகாவித்தியாலத்தில் அறிஞர் J. M. M, அப்துல்காதிர் (நொத்தாரிஸ்) நினைவரங்கினில் 1ம் சமாதானம், இதழை வெளியிட்டோம்.

### அல்ஹாஜ், புலவர்மணி ஆ. மு. சரிபுத்தீன், அவர்கள் (தலைமை)

சமாதானம் முதல் இதழில் எனது முகப்படமும் வெளியிட்டு, நான் எழுதிய 'மருதமுனை வரலாறு' புத்தகம் வெளிவராத காரண குறிப்புக்களையும் வெளியிட்டு, என்னையும் தலைமை வகிக்கச் செய்து கெளரவித்த எனது மாணவரான, 'மருதூர்வாணர்' அவர்களின் இப்பாரிய முயற்சிக்குக் கற்றறிவாளர்களும், கலை இலக்கிய நேசர்களும் கை கொடுத்துச் சமாதானம் வளரப் பெரிதும் உதவவேண்டும், என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

### "முகில்வண்ணன்"

இந்தப் பயங்கரப் போராட்ட காலத்திலும், துணிந்து 'சமாதானம்' சஞ்சிகையை அச்சிட்டு வெளியிடுகின்றதென்றால், நம்மால் முடியாத காரியம்.

78ல் வீசிய பயங்கரச் 'சூறாவளி'யையும் நூலுருவாக்கி, எனது தலைமையில், கல்முனை மெதடிஸ்த மண்டபத்தில் வெளியிட்டு, கல்முனைப் பிரதேச இலக்கியவாதிகளின் ஒரு முன்னோடி, என்ற மகுடத்தையும் பெற்ற சிறந்த எழுத்தாளராகும். தமிழர், முஸ்லிம், சிங்களவர், என்ற சாதிமத பேதமற்ற சமாதான எழுத்தாளர் மருதூர்வாணன், நமக்கெல்லாம் ஒரு வழி காட்டி என்றால் மிகையாகா.

### "மருதூர்க்கனி"

'நாளை நாளை' என்று நாமெல்லாம் நாளைக் கடத்திக் கொண்டிருப்போம். தோழர் மருதூர்வாணர் நம்மில் வேறுபட்டவர். மனதில் நல்லதெனப் பட்டதை உடனே செய்து முடிக்கும் துணிவு கொண்டவர்.

இப்போ நாடு நகர், மூலை முடுக்கெல்லாம், கோரக் கொலை கொள்ளை, கற்பழிப்பு, காட்டுமிராண்டித்தனமும் மலிந்துள்ள இக்கால கட்டத்தில், உடனே தேவை 'சமாதானம்' ஒன்றே தான் என்று முதலில் உணர்ந்து தான். இந்தச் 'சமாதானம்' சஞ்சிகையை அழகுற அச்சிட்டுத் தந்துள்ளார். புரட்சிக் கவிஞர் மருதூர்வாணன் அவர்களுக்குச் சமாதானப் பரிசு கொடுத்தாலும் மிகப் பொருத்தம் என்பேன்.

### S. M. இத்ரீஸ் B. A. (ஈழக்குயில்)

கல்முனைப் பிரதேச எழுத்தாளர்களின் ஒரு முன்னோடி எழுத்தாளர் "மருதூர்வாணன்" என்பதில் நமக்குச் சந்தேகமே இல்லை. நாவலர் ஈழமேகம், அவர்களையும், புலவர்மணி ஆ. மு. சரிபுத்தீன், அவர்களையும் சமாதானம் முகப்பினில் அச்சிட்டு, இலக்கிய உலகுக்கு வழி காட்டியாகியுள்ளார். நாமனைவரும் மருதூர்வாணரின் சமாதானம் வாங்கி ஆதரவு தரவேண்டும்.

அல்ஹாஜ் I. L. M. இஸ்மாயில் J. P. அவர்கள் முதல் பிரதி வாங்கி கிற்றுரையாற்றினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் பூங்கா

## வேண்டாமே நமக்கிந்த வேற்றுமைகள்...

கவிச்சுடர் "அன்பு முகையதீன்" தலைமையில் 30-7-88 சமாதானம் வெளியீட்டு விழாவினில் கவியரங்கும் நடந்தது. இலக்கியமணி செ. குணரத்தினம், கவிஞர் பாலமுனை பாறுக், மணிக் கவிராயர் நோ. மணிவாசகன், பாலமுனை ஆதம், அறநிலா, மருதமுனை ஹசன், றகுமான். ஏ. ஜபார் ஆகியோர் பாடினார்கள்.
மற்றவர்களின் பாக்கள் தொடரும்.

★

மருதமுனை மண்ணுக்கோர்
மகிமை இருக்கிறது!
இந்த மண்ணில்
எழுந்துள்ள தென்னை மரம்
காற்றில் அசைந்தாலும்
கவி ஓசை அதில் கேட்கும்
பாத்தும்மா பின்னும்
பாயிலையும் தமிழ் மணக்கும்.

★

எங்களுக்குள் மூத்தவராய்
இருந்து தமிழ் செய்த
சின்ன ஆலிம் அப்பா
செந்தமிழில் புலமை பெற்றார்
இன்றும் புகழ் மணக்கும்
எங்கள் புலவர் மணி
ஆழ்ந்த திறமையால்
அனைவரதும் நெஞ்சுகளில்
வாழ்ந்திருக்கும் அறிஞர்
வளமான சொற்கொண்டல்
அறிஞர் அப்துல்காதிர் அவர் வழியில்
மருத முனை மண்வளத்தைச்
சிறுகதையில் அற்புதமாய்ச் செய்யும்
கொத்தன், கனி, வாணன்,
இப்படியாய் எத்தனையோ
மைந்தர்களை ஈன்றெடுத்து
தமிழ் வளர்க்கும் மருதமுனை
மண்ணுக்கோர்
முதல் மரியாதை செய்கின்றேன்.

★

பாட்டோடு எங்களுக்கு
பழக்கம் மிகவுண்டு
பாட்டெழுதல் எங்களுக்கு
பழக்கப் பட்டகலை
கட்டுவது அல்ல கவிதை,
செஞ்சொல்லில்
கொட்டுவதே கவிதையென
துறவந்த புலவர் நாம்.
வீட்டில் படுத்திருக்கும்
வேளையிலும் நெஞ்சுகளில்
எட்டுத் திசைகளிலும்
இருந்து வந்து நற்கவிகள்
முட்டும் போதும்
முறுவலிக்கும் எம்மை
தொட்டு அணைத்து
தூக்கத்தைக் கலைத்து விட்டு,
தட்டி விடும் அதனால்தான்
தமிழ் செய்ய நாம் எழுந்தோம்.

★

என்ன கவிஞர்களே!
இதை நீங்கள் ஏற்பீரா?
உண்மை எனக் கவிஞர்களும்
ஒப்பி தலையசைத்தார்.

★

இந்த அரங்கில்
இருக்கின்ற எல்லோரும்
எங்களது மண்ணில்
எழுந்துள்ள இளம்பயிர்கள்
பாருங்கள் எவ்வளவு
பசுமையாய்த் தெரிகிறது,
வாருங்கள் தோழர்களே!
வையகத்தை வென்றெடுப்போம்!

★

எத்தனை கவிக்குயில்கள்
எமக்குள்ளே வளர்ந்துள்ளார்
காணுகிற போதெல்லாம்
களிப்பாய் இருக்கிறது!



பாட்டெழுதித் தோற்ற
பயல்களுக்கு இக்காட்சி
ஏற்றதாய்ப் படுமா
எரிச்சலாய் இருக்காதா?

★

பந்தைக் கிணற்றுள்
பதுக்கி வைக்க முயல்பவனும்
உண்டுதான் அதற்கென்ன
உண்மைக்கு அழிவுண்டா?
எல்லா உலகினையும்
ஏகமாய்க் காக்கின்ற
வல்லவனை மறுப்பவன்
வையகத்தில் இல்லையா?

★

ஆகையினால் குருடர்களை
அப்படியே ஒத்திவிட்டு
வாருங்கள் கவிஞர்களே
வையகத்தை வென்றெடுப்போம்?

★

வேற்றுமைகள் நமக்குள்ளே
வேண்டாமெனக் கூறுகின்ற
பாட்டோடு எங்கள்
பாவலர்கள் வந்துள்ளார்
கைதட்டி எங்கள
கவிஞர்களை வரவேற்போம்
மாலைகள் சூட்டி மகிழ மனமுண்டு
வாடுகின்ற மாலைகளை
வாங்கிவர மனமில்லை
ஆகையினால் உங்களுக்கு
அன்புமலர் சொரிகின்றேன்!

★

வேற்றுமையைக் கிண்டி
வேரொடு சாய்ப்பதற்கு
ஈட்டியாய்ச் செஞ்சொற்கள்
எடுத்திங்கு வந்துள்ளார்.

★

ஆற்று நீர் பெருக்கெடுத்தால்
அதைக் கூடத் தடுத்திடலாம்
பாட்டு நீர் பெருக்கெடுத்தால்
படை நின்றும் இயலாது
நீட்டுவது இனி எனக்கு
நல்லதல்ல, ஆகையினால்
பாட்டரங்கைத் திறப்பதற்கு
பாவலரை அழைக்கின்றேன்.



## ஈராக் வெற்றி பெற

ஈழக்குயில் இத்ரீஸ்

அன்று கஃபாவை அழித்திடவே
அபுலஹப் எழுந்தான் படையுடனே
நின்று தரிக்க முடியாமல்
சிதறிப் போக அவன் படைகள்
விண்ணில் பறந்தே இறையருளால்
கற்கள் வீசிய குருவிகளை
என்றும் எடுத்து இயம்புகின்ற
இறைமறை பிறழப் போவதில்லை.

★

இன்று இஸ்லாம் ஒழித்துவிட
எழுந்த நேசப் படைகளுமே
நின்று சிதறும் முகிற்கூட்டம்
மிதந்து மறைக்கும் ஈராக்கை
சென்று துளைக்கும்
கணைகளெல்லாம்
ஒழித்துக் ட்டு இஸ்ரேலை
சென்று திரும்பும் விமானங்கள்
இறங்கும் லில தரை என்று
ஓடும்பாதை தெரியாமல்
ஓடியும் விமானப் படைகளெல்லாம்
நச்சுப் புகைகள் நாசேறி
நரைக்கும் இளமை சிலமணியுள்
அச்சம் இன்றி இஸ்லாத்தில்
அரவம் கேட்கும் உலகெல்லாம்
வையம் வரைந்திட இவையெல்லாம்
துணிவுடன் கேட்பேன் யாஅல்லாஹ்!

★

உலகின் சிறிய நாடொன்றை
எதிர்த்துப் போரில் பறந்துவரும்
உலகின் பகைமை படைகளினை
அல்லாஹ் நீயே நாசம்செய்
ஈராக் போரில் வெற்றிபெற
இறைவா போரை வழிநடத்து.

★

'அல்- நுஸ்ரத்' பிரசுரத்திலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத மனக் குறிப்புக்கள்

1987ம் ஆண்டு, முன்னாள் ஜனாதிபதி உத்தம J. R ஜெயவர்த்தனா அவர்கள், இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுடன் இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தம் செய்வதற்கு முன்னரே, நாங்கள சமாதானம் பற்றிய ஆலோசனைகளை முன்வைத்தோம். வாணரா? சமாதானமா? என்று கரித்துக் கொக்கரித்தவர்களை மறக்கலமோ?

இன்றும், சமாதானம் பற்றிக் கொக்கரிக்கும் சேவலர்கள் கண்டும் காணாமலும் நையப்புடைத்தாலும் மறைமுகமாகச் சமாதானத்தை விரும்புகின்றார்கள் என்பதையும் மறுக்கலாமோ?

சமாதானப் புறாவை நாங்கள் தான் உலகிலேயே முதலாவதாகச் சின்னம் பொறித்த சமாதானம் சஞ்சிகையை வெளியிட்டோம். பின்னர்தான், அதிமேதகு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் புறாச் சின்னத்தைப் பயன்படுத்தினார்கள். பின்னர் சிறிமாவோ பண்டார நாயக்காவும் புறாச் சின்னத்தை ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்திற்கும் பயன்படுத்தினார்கள், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அன்பு நண்பருமான அல்ஹாஜ் M. H. M. அஷ்ரஃப் அவர்களும் புறாச்சின்னத்தைப் பயன்படுத்தி ஆலமரங்களிலும் பறக்க விட்டார்கள் என்பதை மறக்கத்தான் முடியுமோ?

60, 70லிருந்து என்னை அரசியலில், இலக்கிய உலகில் வளர்த்து வந்ததாக, சகோதரா மசூர்மவ்லானா அவர்கள், புத்தளம், யாழ், கொழும்பு, கண்டி, பொத்துவில், மட்டு. கல்முனை நகரெல்லாம் பேசியிருக்கிறார்கள். என்னை 51ம் ஆண்டு பட்டிருப்புத் தொகுதியில், கும்மிபாட இராசமாணிக்கம் ஐயா கூட்டிப் போனவேளையில், மசூர் மவ்லானா கல்லடி சிவானந்த மகாவித்தியாலயத்தில் மாணவராக இருந்தார் என்பதை இங்கே மறக்கலாமோ?

60ல் எனது அஞ்சலட்டை அழைப்புக்கிணங்கி வந்து கல்முனைப் பிரதேச எழுத்தாளர் சங்கம் ஆலோசனைக் கூட்டம், நஷீத் பீடி மண்டபத்தில் (புலவர் ஆ. மு சரிபுத்தீன் மாமாவின் ஆரம்ப வீடு) கவிஞர் நீலாவணன், அ. ஸ. அப்துல் ஸமது, எஸ். முத்துமீரான், யு. எல். ஏ. மஜீத், மருதூர்கொத்தன், சி. பி. சத்தியநாதன போன்றவர்களை மறக்கலாமோ?

---

## அகழ்வுகள்

### "கலைதாசன் ஹக்கிம்"

சின்னப் புறாக்களின்
சிறகுகள் அறுந்து - இந்த
சின்னத் தேச மெங்கும்
உறையும் இரத்தக்கறைகள்...
வெள்ளைப் புறாக்கள்
சமாதான நகர்வுகளாக.........
சமாதானக் குழந்தைகள்தான்...
சமகாலப் பலிக் கடாக்களாக
இவை - ஒரு
அழிவுக்காக அல்ல!
படித்த இளைஞர்கள்
பழித்தலையும்.........
எதிர்கால வேலைவாய்ப்புக்காய்......
ஏனென்ற கேள்விகளும்
எழுந்து கொண்டே இருக்கும்.



# உலக முஸ்லீம் நாடுகளே! ஒன்று கூடுங்கள்!!

-ஜனாதிபதி சதாம்ஹுசைன்-

உலகில் பின்தங்கிய நாடுகளை அரவணைத்து ''ஐக்கிய நாடுகள் சபை'' என்னும் போர்வையில் தலைமை வகிக்கும் அமெரிக்கா பிரான்ஸ், பிரிட்டனின் தன்நல ஏகாதிபத்தியப் போக்கினைத் திணித்து நேச நாடுகளாக்கிக் கொண்டன. துணிந்து தம் படைபலங்களைக் குவித்து வரும் இந்தியா, சீனா, இந்தோனிஸியா, ஜோர்தான் போன்ற இறைமையும் தன்னாதிக்கமும் பெற்ற [illegible] அமெரிக்கா பிரான்ஸ் பிரிட்டன் போன்ற நாடுகள் [illegible] இவைகளின் தந்திரோபாயங்களை, புரிந்துணர்வு, பரஸ்பரம், ஆயுதக் குறைப்பு, உலகசமாதானம், புத்துயிருடல், பொருளாதார உதவிகள் என்றெல்லாம் பேசுவார்கள். ஐ.நாவில் வாக்கெடுப்பார்கள். இந்தியாவும் பாகிஸ்தான் நட்புறவுகள்... எல்லைச் சமாதானம், வாக்கெடுப்பு நடக்கும் போது அமெரிக்கப் பக்கமே... வறிய நாடுகள் அஞ்சிப் பயந்து அடிமையாகின்றன... ஈராக்கை அடிமைப்படுத்த முடியவில்லை. இப்போது இந்தியாவையும் ஆராய முற்படும் முதலாளித்துவங்கள் அமெரிக்காவை ஆராயவோ, அணுவாயுதக் குறைப்பையோ, அலசிப்பார்க்க முற்படவில்லை. நேச நாடுகள்... ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஏமாற்றுத் தந்திரோபாயங்களை ஈராக், ஜோர்தான், பலஸ்தீன், இந்தியா, சீனா போன்ற நாடுகளை விழிப்படையச் செய்தவர் சதாம் ஹுசைன்தான். இவரை விழுத்திப் பிடிக்கவே நேச நாடுகள் சதி செய்தன. மீண்டும் முனைகின்றனர்! பொருளாதாரத் தடை என்றும் மேலாதிக்கம் செலுத்தி மிரட்டி வருகின்றனர். பாவம், சோவியத் ரஷ்யாவும் கொர்பச்சேவும், பலசாலியான எல்ஸ்டினும் கம்யூனிசமும் சிதறிக் கொண்டிருக்கின்றன.

●●

# சரித்திரம் பொய்யாவதில்லை

சரித்திரம் என்று வந்தால் சொல்வதை உள்ளபடி
சனங்கள் தெளிவு பெறச் செப்புதலே சிறப்பாகும்.
நரிக்கதை, புலிக்கதை நாம்படும் துயரக்கதை
நலிவுற்ற மக்களின் வாழ்வுக்காய் நாவலும், சிறுகதை
விரித்தெழில் நூல்போட்டால், விரும்பியோ, வெறுப்பிலோ
விபரங்கள் அறிந்திட வாங்கியே படிப்போரும்
சரித்திரம் இதுபிழை சரிஅது என்றெல்லாம் அலசுவர்,
சரிபாதி மக்களே சரி என்றும் புகழுவார்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உலகத்தில் ஒரு சதாம் ஹூசைன்' காவிய நாடகம்,
உரைத்துயான் உண்மையில் ஆங்கெல்லாம் நடந்தன,
கலகத்திற் புழுகாதான் நரகத்திற் பாதி, என்று
கட்டுக்கதை புகழ்மீறி ஈராக்கைப் புகழவில்லை.
உலகத்தின் முஸ்லீம்கள் உயர்செல்வம் எரிபொருள்
உண்டாக்கும் நாடுகளை எவ்விதம் யூதர்கள் அணுகினர்,
கலகத்தில் கோள்மூட்டி அரபியரை அடக்கினர்,
கவிதையில் கோடிட்டுக் காட்டவே முனைந்துள்ளேன்.

★

எங்களின் அரசியல் மனிதர்கள் சிலபேர்கள்
அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், என்றதும்,
தங்களின் பலவீனத் தெளிவற்ற மதியினால்
தலைகுனியப் பட்டிருந்த தனவந்த வல்லரசுகளின்
பொங்கலைச் சுகித்திடப் பலபேரும் அந்நியர்
பொருளாசைக்காய் கைகூப்பிப் போற்றுவர்; சிலமக்கள்
எங்களின 'சரிஅத்'தை இஸ்லாத்தின் நெறிப்படி
ஏற்பதை விரும்பியே ஈராக்கின் போக்கினை விரும்பினோம்.

●

# முக்காலக் கண்ணோட்டம்.

அந்தக் காலத்திலே எகிப்திய நாட்டை ஆண்டு வந்த
அமெரிக்காவின் ஏவல்நரி, பாறூக் மன்னனை அறிவீரோ?
மதுவிலும் மங்கையிலும் மனதைப் பறிகொடுத்த மாபாவி
மதிமலங்கி யூதர்களுக்கு அடிமைப்பட்ட காமாந்தகன்,
எகிப்தின் வளங்களாம் எண்ணெய்வளம், சூயஸ்கால்வாய்
எல்லாவற்றையும் 'குத்தகை' என்னும் போர்வையிலே,
யூதநாட்டாருக்கு அடகுவைத்தான்; அறிவிழந்தான் பாறூக்,
யூதராணிகளின் களியாட்டங்களில் செப்பமான மேனியின்பம்
அனுபவித்தான், பாவித் தலைவன் பாறூக் மன்னன்.
மக்களின் பாவிகளைப் பூண்டோடழிக்கக் கமால் அப்துல் நாஸர்
ஆணையிட்டார் - மதுமங்கை வெறியன் பாறூக் மன்னனை
உடுத்திருந்த மேனியோடு இரவோடிரவாக நாடு கடத்துமாறு,
கண்ணியத் தளபதி கமால் அப்துல் நாஸர் கட்டளையிட்டார்'
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டினில் தீனுல் இஸ்லாம்,
எகிப்தினில் மட்டுமில்லை, உலக முஸ்லீம் நாட்டுக்கெல்லாம்,
அப்துல் நாஸர் பெரும் விழிப்பை தீனுணர்வுகளை ஏற்றிவிட்டார்
அதன் பின்னர், ஈரானிய மதுவெறியன் மாதுவெறியன்,
அமெரிக்காவின் ஏவல்நரி மன்னர் ஷா, பெண்பித்தன்,
ஈரானிய எண்ணெய்வளம் கனிவளங்கள் ஈடுவைத்து
இரவுராணிகளைக்கிளப் நடாத்தி மனம்போல மகிழ்ந்திருந்தான்
பொறுக்காமல் கொமெய்னி மார்க்க மேதையன்னார்
பொங்கி எழுந்தார், பொதுமக்களை விழிப்புறச் செய்தார்.



காமவெறியன் மன்னர் ஷா, ஆயத்துல்லா
கொமெய்னியின் கர்மவீரர்களால் பிடிக்கப்பட்டு
தெருக்களிலே நாயை இழுத்துச் செல்வதுபோல்
துரத்தியும் அடிக்கப்பட்டான்! மன்னன் ஷா. இவனுக்கு
தரகு வேலை பார்த்த பிரதமர் பக்தியாரும் மந்திரிகளும்
ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஏவல்நரி முகங்களிலே
அவமானக் கரிபூசிவிட்டார் ஆயத்துல்லா கொமெய்னியவர்கள்
வல்லரசுகளின் ஏவல்நரித் தரகர்களுக்கு விலங்கிட்டனர்,-
வல்லநாயன் அல்லாஹ்வின் வழி இஸ்லாம் எழுச்சியுற
ஈரானிய முஸ்லீம்களை விழித்தெழச் செய்தார்கள்........
ஆயத்துல்லா கொமெய்னியின் ஆற்றல்களை உலகெல்லாம்
ஷரிஅத்தின் வழிஒழுகும் முஸ்லீம்களும் விழித்தெழவும்
சதிகார யூதர்களின் கொடுமைக் கெதிராய்த் துணிந்து
முஸ்லீம் நாடுகளின் முத்தடிமை விலங்கறவும்,
முக்கால மன்னர்களின் மடமைகளை விளக்கினார்கள்
முஸ்லீம்மார்க்க மேதைஎங்கள் ஆயத்துல்லா கொமெய்னியாகும்.

★

மேற்கூறும் முறைகேடுகள் அணுகாதிருந்த ஈராக்கினில்
மேன்மைதரும் முஸ்லீம்மார்க்க ஒரு ஊசிலர் ஜனாதிபதி
சதாம்ஹூசைன் யூதர்களின் வல்லரசுகளின் அடக்குமுறை
சதிமுயற்சி அனைத்திற்கும் எதிராகத் துணிந்தெழுந்தார்,
''உலக முஸ்லீம்நாடுகளே ஒன்றுகூடுவோம்''
''உத்தம நபிஸல்லம் காட்டியவழியே ஆட்சிசெய்குவோம்''
''நாரே தக்பீர் அல்லாஹூ அக்பர்''
என்றும் வீரமுழக்கம் கூறிக் கொண்டே
அமெரிக்காவின் சதிநாசக் கும்பல்களாம் நேசநாடுகட்
கெதிராகத் துணிந்தெழுந்து ஈராக்கிய ராணுவப்பலத்துடன்
சதாம் ஹூசைன் உலக முஸ்லீம் மக்களையும் வீரமூட்டி,
சரிஅத்தை நிலைநாட்டி, யூதர்களின், வல்லூறுகளின்
கொடுமைக் கெதிராக நீதிகேட்டுப் போராடிக்
கொண்டிருக்கிறார்கள், நாளைய அரபுலகம், சதாம்
ஹூசைனின் அறைகூவலை ஏற்கப்போவதே உண்மை.

★

---

## "கனவும் மனிதன்"

சிறுகதைத் தொகுதி

ஆசிரியர் M. I. M. ஹனீப் B.A. (சட்டக் கல்லூரி மாணவர்)
பத்திரிகைகளில் வெளிவந்த 12 சிறுகதைகளின்
அழகிய தொகுப்பு நூலுக்கு கலாநிதி M. A. நுஃமான் (பேராதனைப் பல்கலைக்கழகம்) அறிமுகம் செய்கிறார்.
இது ஒரு "முனைப்பு" வெளியீடு.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிடைக்கப் பெற்றோம்
# ★வாழ்வோரை வாழ்த்துவோம் 2ம் மலர்

அல்ஹாஜ் A. H. M. அஸ்வர் M. P. முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின், கலை இலக்கியத்தாக உணர்வுகளால், வாழ்வோரை வாழ்த்துவோம். முஸ்லீம் கலாச்சார விருது மலர் 2ல், கலைவாதி கலீல், அவர்களின் கைவண்ண முகப்புப்படம்.

உள்ளே முதற்பக்கம், வறுமைஒழிப்புத்தந்தை ரணசிங்க பிரேமதாச அவர்களின் வண்ணப் பெரிய படம். 2வது, பிரதம மந்திரி D. B. விஜய துங்க, அவர்களின் படம், 3வது, W. J. M. லொக்குபண்டார கலாச்சார அமைச்சரின் படம், 4வது, மாண்புமிகு முஸ்லீம் சமய பண்பாட்டு கலாச்சார அமைச்சர் அல்ஹாஜ் A. H. M அஸ்வர் அவர்களின் படமும், ''ஜன்னலைத் திறப்போம்'' கட்டுரையும் எழுதியுள்ளார்கள்.

5வது, முதலாவது, முஸ்லீம் கலாச்சார விருது பெற்றவர்களின் அணிவகுப்பு படம் அ. ஸ. அப்துல்ஸமது, புலவர்மணி, ஆ. மு. ஷரிபுத்தீன் கலைவாதி கலீலு, மற்றவர்களின் முழு உருவப்படங்களும் உள்ளன. 6வது, மர்ஹூம் கலாசூரி முகைதீன் பேக், முன்னர் வாங்கிய விருதுப் படமும் முழு அளவினில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

★ எழுத்தணிக்கலை, வரலாறு, எம். எஸ். ஏ அஸீஸ், இசையியல் M. M. M. மஹ்றூப், முகைதீன் பேக், லட்சுமிபாய். நிசாம் கரீம்.

★ அறிவியல் ஆய்வியல், அல்ஹாஜ் எம். எம். கமால்தீன் M. M. M. மஹ்றூப், வித்துவான் எம். ஏ. ரஹ்மான், எம். எச். எம். ஷம்ஸ்.

★ புனைகதை இயல். நாவலாசிரியர் இளங்கீரன், வை. அஹமத்.

★ வானொலி தொலைக்காட்சி, இசைநாடகவியல், எ. எம். காமில் மரைக்கார், சேக்மீயான் முஹம்மது ஹாரி. ஜனாபா சுர்ஷித் கௌஸ், எஸ். ஐ. எம். அப்துல் ஜப்பார், M. P. M. ஹூசைன்பாரூக், ஜனாபா மிஸ்ருல்ஹனிமா.

★ மேடை இசை நாடகவியல், எம். எச். பௌசுல்அமீர், K. A. ஜவாஹிர், ஜனாபா ஜெய்ரஹீம் சயீத், சக்காப் மவ்லானா.

★ பத்திரிகையியல், அபூதாலிப் அப்துல் லத்தீப், அல்ஹாஜ் A. H அபுஉபைதா, அல்ஹாஜ் M. P. M. அஸ்ஹர்.

★ அசைவுறுகலையியல், துவான் அலால்டீன் இப்பன்சான்டின், லாஹீர் ஷஹீத், M. M. A. லத்தீப்.

★ அஹதியா, அல்ஹாஜ் M. H. M. பஹூசுதீன்.



★ ''ஒரு நூற்றாண்டுகால முஸ்லீம் புனைகதைகள்'' அறிஞர் அ. ஸ. அப்துஸ்ஸமது, B A அவர்களின் கட்டுரையும் இடம் பெற்றுள்ளது. கலை இலக்கிய உலகினர் வெகுவாகப் பாராட்டக் கூடிய சிறந்த முஸ்லீம் கலாச்சார விருது 2ம் மலராகும்★

★ கவிதையியல், சாரணா கையும், அன்புமுகையதீன் அல் - அஸூமத்;

அல்ஹாஜ்A. H M அஸ்வர், M P. முஸ்லீம்கலாச்சார அமைச்சரின் முதல்விழாச் சொற்பொழிவும் கட்டுரையும் அந்தனிஜீவா எழுதியுள்ளார்.

# உலகத்தில் ஒரு சதாம் ஹூசைன்

(வரலாற்றுக் கவிதை நாடகம்)

''சமாதானம் மருதூர்வாணன்''

இடம்:- ஜனாதிபதி மாளிகை, அதிமேதகு ஜனாதிபதி சதாம் ஹூசைன், அவர்கள் சுபஹ் தொழுது பின் துஆ........

சதாம் - (இருகரம்நீட்டி) யாஅல்லாஹ், உனக்காகவே பிறந்தேன் உனக்காகவே வளர்ந்தேன். உனக்காகவே பல நன்மைகளைச் செய்து வருகிறேன் ஈராக்கிய எனது நாட்டு மக்களையும் பொருள் பண்டங்களையும், பகைவர்களிடமிருந்து நீயே காப்பாற்றுவாயாக. உலகையூதர் எல்லாம், முஸ்லீம் நாடுகளைக் கொத்தடிமையாக்க முயலுகின்றனர். இந்த கோர அடிப்போராட்டங்களிலிருந்து எங்களைக் காப்பாத்துவாயாக.

காப்பாளர் - (கனைத்தல்) ஊ... ஹ்க்கும்
அஸ்ஸலாமு அலைக்கும் பாதுஷா அவர்களே!
அவசரச் செய்தி ஒன்று ஆலம்பனா!......

சதாம்:- வஅலைக்குமுஸ்ஸலாம், வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்தஹ் என்னதான் செய்திஅது காப்பாளரே?

காப்பாளர்:- நமது பிரதம வெளிவிவகார தாரீக் அஸீஸ் அமைச்சர்
அவர்கள் நலமான செய்தி கொண்டுவந்தவராம்
ஆலம்பனா! உங்களை அவசரமாய் சந்தித்து
ஆலோசனை செய்யவேண்டி ஆவலுடனாம்,
மாளிகையின் பூஞ்சாவிலே அவர்களுடன்
மந்திரிமார் பிரதானிகளும் வந்துள்ளனரே!

சதாம்:- (பிரார்த்தனை) '... நாரேதக்பீர். அல்லாஹூ அக்பர்...'
[illegible]

என்றென்றுந் தேவை யாஅல்லாஹ்...
எகூதிகளை யூதர்களை, ... இஸ்லாமியர்
வென்றெடுக்க நீ எமக்கு நல்லருள் தா!
வல்லவனே எங்களுக்கு வீரத்தைத் தா!
ஆ... காப்பாளரே, கண்ணியமாம் பிரதமரையும்,
பிரதானிகளையும் உடன் வரச் சொல்லுங்கள்...
(காப்பாளர் சென்று அழைத்து வருதல்)

தாரீக்:- அஸ்ஸலாமு அலைக்கும் ஆலம்பனா!
சதாம்:- வஅலைக்கு முஸ்ஸலாம்; நாரே தக்பீர்...
(எல்லோரும்) அல்லாஹு அக்பர்.
அல்லாஹ்வின் நல்லடியாளர்களே! தாரீக்
அஸீஸ், கண்மணியாம் பிரதமர் அவர்களே
விசேட சேதிகள் ஏதேனும் உள்ளனவா?
விளங்கிடக் கூறுங்கள்! போர்க்களம் போனீர்களா?
தாரீக்:- பாதுஷா, ஆலம்பனா; பாவிகளாம் யூதர்களும்
பலஸ்தீன மக்களையும் பல அகதிமுகாம்களிலே
விமானங்களில் பறந்துவந்து குண்டுவீசி
விபத்துக்களை... மரணக்குரல் முழங்குதாங்கே!
அகதிமுகாம் பாடசாலைக் குழந்தைகளும்
அல்லாஹு அம்மா என்றலறி ஓடிச்சாகும்
அவல நிலைகள் என்னசொல்வேன் ஆலம்பனா,
யூதரெல்லாம் நம்முஸ்லீம்களை எரிக்கின்றனரே!
சதாம்:- (ஆத்திரமடைந்து) ......ஆ.....!
நாரே தக்பீர்... அல்லாஹு அக்பர்......
யூதர்களே ஒழிந்து போங்கள்......
இஸ்ரேலிய யூதர்களின் கொடுமைகளை
இதற்கு மேலும் பார்த்துக் கொண்டே இருக்கலாமோ?
உடனே போர்நாம் தொடுக்க வேண்டும்.
உரம்மிகுந்த ஈராக்கிய நம் ராணுவங்களே......
தாரீக்:- மேலும் ஒரு மோசடிச் செய்தி ஆலம்பனா!
சதாம்:- (வெகுண்டார்)
மோசடிச் செய்தியா? எங்கே மோசடி?
மோசடியை யார்செய்தார்? விளங்கச் செப்புங்கள்?
தாரீக்:- நமது ஈராக் நாட்டிலிருந்து குவைத்தினூடாக
நஜ்ரான், சூடான், ஜோர்தான் பன் நாடுகட்கும்
குழாய்கள் மூலம்போகும் பெற்றோல் எரிபொருளை
குவைத்திலிருக்கும் கொடியயூதர்கள் துளைவிட்டு
வயர்கள்மூலம் களவெடுத்து வருகின்றான்கள்......
வரவுசெலவு ஆராய்ந்தபோது மூவாயிரம் கோடிடாலர்
இந்தக்களவை யூதர்கள் நெடுங்காலமாச் செய்கின்
-றனராம்
இம்மோசடிகளைச் செய்வித்தவன் அல்சபாவாம்;



சதாம்:- (கர்ச்சித்தல்)
நமது உடற்பிறப்புக்களான குவைத்திய மன்னன்சபாவா
நம்பலத்தை அறியாமலா இம்மோசடியைச் செய்வித்தவன்,
முன்னரும் ஆயிரம்கோடி நஷ்டவீடு தரவேண்டும்,
முழுவதும் தரஏலாமல் இழுபறிப் படுறான் மன்னன்சபா.
தரகர்களான யூதர்களை ஏவிவிட்டுக் களவெடுக்கும்படி
தரங்கெட்டுப் போனானா குவைத்திய மன்னன்சபா?
ஐக்கிய நாடுகள்சபையில் அல்சபாவுக் கெதிராய்
உடனே வழக்குப் போடுங்கோ, அமைச்சர்களே!
(தளபதி வருதல்)
இர்பான்:- பாதுஷா, ஆலம்பனா! ஆபத்து! ஆபத்து!!
பாவிகளாம் யூதர்கள் நமதுஎண்ணை களஞ்சியங்களுக்கு
ஏவுகணைகளை ஏவிவிட்டு எல்லாவற்றையும் எரியச்செய்து
எங்களையும் ஏவுகணைகளால் துரத்திக்கொண்டே வாறானுகள்.
சதாம்:- (கோபாவேசத்துடன்)
ஆய்ங்ம்... என்ன கொடுமையடா யூதன்களே!
உடனே ஓடுங்கள், போர்விமானங்களை ஏவிடுங்கள்,
நாரே தக்பீர் அல்லாஹு அக்பர்;
(எல்லோரும் தக்பீர் முழங்கினர்)
நாசகார யூதன்களை விரட்டியடியுங்கள்!
அவன்கள் எந்தநாட்டு யூதனுகள்? காட்டுராமிண்டிகள்;
எந்தப் பக்கமிருந்து வந்துகொண்டு தாக்குறானுகள்?
இர்பான் தளபதி:-
குவைத்திய நாட்டு விமானங்களி லிருந்துபறந்து
குர்திஷ் பக்கமாவந்து குண்டுகள் வீசும்போழ்து
நாங்கள் சுட்டு விமானங்களை வீழ்த்தி இப்போ
நாலுயூதப் பயங்கரவாதிகளைப் பிடித்து வந்துள்ளோம்.
சதாம்:- (இடிமுழக்கமாய்)
நாரே தக்பீர் அல்லாஹு அக்பர்.
(எல்லோரும் தக்பீர் முழங்கினர்)
உடனே குவைத்தை விரைந்து வளைத்துப் பிடியுங்கள்!
படைகளை அனுப்பிப் பகைவன் சபாவையும் பிடித்துவாங்கள்!
பயங்கர வாதிகள்யூதர்கள் யாவரையுந் தேடிப்பிடியுங்கள்!
அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளரின் சதிநாசவேலைதானது..
அல்சபாவும் யூதர்களின் கைப்பொம்மை யாகிவிட்டான்-
ஈராக்கிய நம்படைவீரர்களின் போர்வலிமையை உணராத
-மடையன்கள்-
அமெரிக்கஅரசையும் ஏவல்நரிகளையும் நாமெல்லாந் துணிந்து
அடித்துத் துரத்தாமல் ஓயமாட்டோம். குவைத்தை
வளைத்துப் பிடிப்போம்; விரைந்து புறப்படுங்கள் வீரர்களே!
நாரே தக்பீர், (எல்லோரும்) அல்லாஹு அக்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ம் காட்சி

இடம்:- (குவைத் நகரம்)
இர்பான் தளபதி. முகாமில், கோபாவேசம்:-
''அடேய்! யூதர்களே! எங்கள் ஈராக்கின்
எண்ணைக் களஞ்சியங்களை ஏவுகணைகளால் தாக்கியவர்
யாரடா? மடையன்களே? இக்கொடிய செயல்களை
யாரடா உங்களைச் சதிநாசஞ் செய்யச்சொன்னவன்?
(சாட்டை அடி கொடுத்தல்)
யூதர்கள்:- (அழுது புலம்பல்)
ஆ... ய்...ங்ம்... அடியாதீங்கோ தளபதியாரே! டம்பெல்லாம்
அறுபட்டு இரத்தங்கசியுதே! ஆய்... ஐய... கோ... ''
இர்பான்:- (ஆத்திரம்)
உண்மைகளை ஒழிக்காமல் ஒன்றும் விடாமல்
உள்ளபடி சொல்லாவிடில்... உங்களை கொஞ்சம்
கொஞ்சமாத் திருக்கைவால் சாட்டையினால்
கொல்லமாட்டோம், சித்திரைவதை தான்செய்வோம்.
யூதர்கள்:- (அழுது கெஞ்சுதல்)
ஆய்ங்ம்... அப்படிச் சித்திரவதை செய்யாதீங்கோ,
அல்சபா மன்னரின் ஆணைப்படி ஈராக்கின்
எண்ணை வளங்களை மாடிமனைகளை கோபுரங்கள்
எல்லாவற்றையும் அழிக்கும்படி பணிக்கப்பட்டோம்
இர்பான்:- (வெகுண்டார்)
''...ஆ... அப்படியா? அல்சபா மன்னர் மடையனா?
எகூதி யூதர் உங்களிடம் ஆணையிட்டானா?
அவனுமொரு குவைத்து நாட்டின் முஸ்லீமாடா?
அல்சபாவை மன்னனென்று சொல்லலாமாடா?
உலகமுஸ்லீம் போற்றுகின்ற ஈராக்நாட்டின்
உலமாக்கள் அறிஞர்களையும் தேடிப்பிடித்துக் கொன்ற
முஸ்லீம்கள் சரிஅத் மாறாக் கொள்கையுடன் [-தேனடா?
முழுவுலகும் புகழுகின்ற ஜனாதிபதி சதாம்ஹுசைனின்
நேர்மைமிக்க ஆட்சிக் கெதிராய் தீமை செய்யும்
நேர்மையற்ற மன்னன்சபா ஒருமுஸ்லீம் தலைவனடா?
யூதருங்களின் கிளப்களில் முஸ்லீம் குமர்களை
யூதர்நீங்கள் மதுவெறியில் கற்பைக் கெடுக்கவும்
குவைத்திய முஸ்லீம்கள் களியாட்டம் போடவும்
நடித்துக் கும்மாளம் போடவும் குருடனாய்ப் பார்த்திருந்த
அல்சபாவைத் தேடிப்பிடியுங்கடா, இழுத்து வாங்கடா.
அவனின் குடலைப் பிடுங்கி இந்தயூதன்களின் கழுத்தினிலே,
மாலையாகப் போட்டெங்கும் முஸ்லீம்உலகத் துரோகிஎன்று



மத்தியக்கிழக் கெல்லாம் பழித்திடச் செய்வோம் ஓடுங்கடா!
அல்சபா மன்னனைத் தேடிஇப்போ பிடித்துவாங்கடா!
ஈராக்கிய ராணுவச்சிங்கங்களே விரைந்துடன் பறங்கடா!
(சிலராணுவம் போனபின், சிலராணுவம் யூதர்களை
இழுத்துக் கொண்டு வருதல்)
அபுசிறாஜ்:- ஐலனா! தளபதியாரே! இந்தயூதர்கள் பலஸ்தீனத்தின்
ஆம்றமூ பெண்குமர்களை நிர்வாணத்துடன் வைத்து
கேலிக்கலம் பாடிஆடச் சொல்லிச் சாட்டையாலும்
குறைச் சிகரட்நெருப்பினாலும் மார்முலைகளில் சுட்டும்
அவமானப் படுத்திக் கொண்டு கற்பழித்தானுகள்......
அல்சபா மன்னனின் அலங்கார மாளிகையிலே.........
இர்பான் :- (ஆததிரப்பட்டார்)
'ஆ... ! அப்படியா? அந்த அயோக்கிய மன்னனை
அல்சபாவை ஏனடா நீங்கள் பிடித்திழுத்து வரவில்லை?
அபுசிறாஜ்:- (பயந்த குரலில்)
நாங்கள் அல்சபாமன்னனின் அரண்மனை முழுவதிலும்
நாற்புறமும் வளைத்துத் துப்பாக்கிச் சப்தங்களைவெடித்தோம்
எங்கேயும் காணவில்லை, அந்தக் காமவெறியனும்
எங்கேயோ ஓடி ஒழித்து விட்டான் காட்டுமிராண்டிசபா
இர்பான் :- (எரிச்சலுடன்)
ஓடுங்கடா...... ! ஓடுங்கள்! குவைத்நாட்டின் கொடியோனை
யூதநாடுகளின் தரங்கெட்ட தரகன் அல்சபாவைத்
தேடுங்கடா! தேடிப்பிடித்து இழுத்திங்கே வாருங்கடா
தீனுல் இஸ்லாத்தில் இருந்துகொண்டு முஸ்லீம்களை
விபட்டு, ஏமாற்றி நாட்டுமக்களை மடையர்களாக்கி,
வருமானங்களை எல்லாம்அரசுடமையாக்கி, அல்சபா
ஆடம்பரமாக உண்டுருசித்து அழகுராணிகளை
அரண்மனைக் கிளப்புகளில் கடத்திவரச்செய்து
களியாட்டம் போடும்மன்னராட்சியை இனிஒழியுங்கடா
குவைத் முஸ்லீம்களைத் தலைநிமிர்ந்து வாழச்செய்யுங்கடா
(மீண்டும் யூதக்கைதிகள் பக்கம் தளபதி)
அடேய் யூதர்களே! அயோக்கிய ஏவல்நாய்களே!
அல்சபாவை வெறியானக்கிய காஃபீர்களே!
பலஸ்தீனக் கன்னியர்களைக் கடத்தி வந்து
பாலியல் கிளப்நடாத்தும் படுபாவ யூதர்களே!
இஸ்ரவேலரின் சதிநாசப் பேயர்களே! காமலரக்கர்களே!
இனிமேலும் உங்கொடுமை சகிக்க மாட்டோமடா!
ஈராக்கின் வீரர்களாம் ராணுவங்கள் பலத்தினிலே
இஸ்லாமிய நாடுகளை ஒன்றுகூடச் செய்வோமடா!
நாரே தக்பீர்
(எல்லோரும்) அல்லாஹு அக்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ம் காட்சி

இடம்;- பக்தாத் ராணுவ மத்தியமுகாம். ஜனாதிபதி,பிரதமர்.
எங்கணும், நாரே தக்பீர் முழங்கிக் கொண்டிருந்தன.

தாரீக்:- பாதுஷா! யுத்தப்பேரிரைச்சல்கள் ஈராக் முழுவதிலும்
பாரதூரமாகப் போர்வெடித்துக் கொண்டிருக்கின்றன.

சதாம்:- (ஆர்ப்பரித்தல்) ......ஆ...... பிரதமர் அவர்களே.........
நாங்கள் இப்பவே போர்க்களத்தைப் பார்வையிட
-வேண்டும்

நாசகார சக்திகளை ஒழிக்கவேண்டும்! அமெரிக்காவின்
ஜோர்ஜ்புஸ்ஸும், நேசநரிகளும் என்னைப் பிடித்தழிக்க
ஜோசியம் பார்த்து கங்கணம்கட்டிக் கொண்டிருக்கானுகள்

தாரீக்:- (பயந்த குரலில்) ......ஆபத்து ஆலம்பானா......
இப்படியான அகாலமரணப் போர்க்களங்களுக்கு நாம்
எங்ஙனம் போவது ஆலம்பனா? சதிகாரர் ஒருவேளை
அப்படி ஏதேனும், மாறுவேடத்தில் யூதர்கள்,
அணுகி, நமதுராணுவம்போல் உடையணிந்து வந்து......

சதாம்:- (சீறிச் சினந்த கர்ச்சனை) ......ஆஹைறய்ங்ம்......
"நாரே தக்பீர் அல்லாஹு அக்பர்......
நாயன் நம்பக்கம் இருக்கின்றான் பிரதமர் அவர்களே!
நீதியோடு துணை தருவான் வல்லநாயன், பயப்படாதீர்
நல்லபெரும் நாயனனல்லாஹ் தூயபெரும் இஸ்லாத்
-துக்காய்

ஈராக்கிய நமதுமக்கள் போர்க்களத்தில் துணிவுடனே
நாரேதக்பீர் முழங்கிக்கொண்டு தியாகப்போர் செய்
-கின்றனரே

நமதுவீரப் புருசர்களுக்கு உற்சாகமூட்ட வேண்டாமோ?
நமதல்லாஹ் துணைதருவான் நடவுங்கள் போர்க்களமே

தாரீக்:- (சற்றுத் தயங்கிய குரலில்)
"கொஞ்சம் பொறுங்கோ ஆலம்பனா! நம்மைச்சுற்றி
கொடியவரின் விமானங்கள் நாற்புறமும் வருவதுபோல்,

சதாம்:- (எகிறிப் பேசல்)
"பயப்படாதீ பிரதமரே! நமதுபடை எதிர்தரப்பில்
பக்தாதின் நகரமெல்லாம் பீரங்கிப் படைவிமானங்கள்
அமெரிக்காவின் பசாசுகளைச சுட்டுப் பொசுக்கின்றனர்
எக்கூதிகளை ஓடஓடச் சுக்குநூறாய்த் துரத்துகின்றனர்.

தாரீக்:- (அவதானக் குரல்)
அதெல்லாம் சரிதான் ஆலம்பனா, உங்களையே
ஆளடையாளங் கண்டெவனும் குறிபார்த்தால்......

சதாம்:- (கர்ச்சிப்பான குரலில்) ......நாரே தக்பீர்



(எல்லோரும்) அல்லாஹு அக்பர்
அல்லாஹ் நல்லடியார்களை எப்போழ்தும் ஆபத்துவேளை
அருகிருந்து காத்தருள்வான்! எனஅண்ணல்நபி கூறினார்கள்!
அறிவிழந்த யூதர்களுக்கு அஞ்சிப்பயந்தே ஓடமாட்டோம்
அமெரிக்காவின் ஏகாதிபத்திய அடக்குமுறையை எதிர்த்துநிற்போம்
யூதருக்கு மத்திய கிழக்கினில் தனிநாடா?
இஸ்ரவேலை அமெரிக்காதான் தூண்டிவிட்டது,
இஸ்லாமிய நாடனைத்தும் அமெரிக்காவின் அடிமைகளா?
அரபுநாடுகளை இனிமேலும் தலைகுனிய விடமாட்டோம்!
அமைச்சர்களே; வீரர்களே!! தளபதிகளே!!!
ஈராக்கின் முஸ்லீம்களே விழித்தெழுங்கள்!
நாரே தக்பீர் (எல்லோரும்) அல்லாஹு அக்பர்.
அமெரிக்காவின் எச்சில்நக்கும் அரபுநாடுகளும்
ஆறாயிரம் மைல்களுக் கப்பாலுள்ள வல்லரசுகட்கு
அடிபணிந்தார், ஈராக்கிய முஸ்லீம்கள் விரும்புவமோ?
அறிவுள்ள வீரர்களே சிந்தியுங்கள், செயல்படுவோம்!
நாரே தக்பீர் (எல்லோரும்) அல்லாஹு அக்பர்.

இர்பான்:- (தளபதி, வீராவேசத்துடன் வந்து கொண்டே)
ஈராக்கின் படைப்பலம்போல் உலகிலெங்கும் இல்லையடா!
எம்மை வெல்ல அமெரிக்காவின் ஏவல்படைகளாலும் முடியாதடா!
அல்லாஹ்வின் துணைப்பலத்தால் யூதர்களை வெல்வோமடா!
அணுவுலைகள் ஏவுகணைகள் கண்டம்விட்டுக் கண்டம்பாயும்
கழுகுக்கணை குறிதவறாது எதிராளிவிமானங்களை அழிப்போமடா
ஈசுடர்களின் படைப்பலத்தைக் கணப்பொழுதில் வெல்வோமடா!
நாரே தக்பீர் (எல்லோரும்) அல்லாஹு அக்பர்.

# 4ம் காட்சி

இடம்:- ஜனாதிபதி மாளிகை, சதாம், அஸீஸ், தளபதிகள்

இர்பான்:- (வெற்றிக்குரல்)
ஒருநாளா ஒருவாரமா? ஒருமாதம் முடிவதற்குள்
அமெரிக்காவின் ஏவல்படை அனைத்தையுமே
ஓட ஓட விரட்டித் துரத்தி விட்டோம்!
ஈராக்கிய முஸ்லீம்கட்கு வெற்றியடா!
ஈராக்குடன் சமாதானம்பேசி வல்லரசுகள் வாறாங்கடா!
அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனியும்
ஈராக்கை அடிமையாக்கச் சதித்திட்டம் நடந்ததடா!
எம்மை வெல்ல வல்லரசுகளால் முடியாதடா!
நாரே தக்பீர்
(எல்லோரும்) அல்லாஹு அக்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபுசிறாஜ் தளபதி:- (உரத்த குரலில்)
சதாம்ஹுசைன் எங்களுக்குத் துணிவைத் தந்தாரடா!
சர்வமுஸ்லீம்நாடுகட்கும் சதாம்ஒரு முன்னோடியடா!
உலகத்தில் ஒரு சதாம்ஹுசைன் வழிகாட்டியடா!
உலகமுஸ்லீம் நாட்டுக் கெல்லாம் விடிவெள்ளியடா!

தாரீக் அஸீஸ்:- (அமைதியான குரலில்)
அன்புள்ள முஸ்லீம் உலக வீரர்களே!
அமைதியா யிருங்கள்! அரபுலகத் தலைவர்களுக்கு
நம்ஜனாதிபதி சதாம்ஹுசைன் அவர்கள்
நன்நெறிகள் கூறுவார்கள் நாமெல்லாம் செவிமடுப்போம்

சதாம்:- (நிதானக் குரலில்)
அன்புள்ள முஸ்லீம்களே! அரபுநாட்டுத் தலைவர்களே!
அறிவுள்ள முஸ்லீம்மார்க்க உலகாயத் தொண்டர்களே,
இந்தியப் பிரதமர் இராஜிவ் காந்தியும்,
இரஷ்யா ஜனாதிபதி மிகாயில் கொர்பச்சேவும்
அமெரிக்கப் படைகளுடன் போர்நிறுத்தம் செய்யுமாறு
ஆலோசனை கூறினார்கள். ஜோர்தான் மன்னன்
ஹுசைன் பெரியாரும் யாசீர் அரபாத்தும் கலந்துபேசி
ஹக்கனல்லாவின் வீரபுருசர்களாம் தளபதிகளின்
கருத்துக்களையும், ஈராக்மக்களின், பசிபட்டணி,
கருமாரி நோய்மருந்து நிலை யுணர்ந்தும்
ஈமானை இழக்காமல், போர்நிறுத்தம் செய்தோம்!
எங்கள் சகோதர அரபுநாடுகளின் தலைவர்களே!
அமெரிக்க, பிரான்ஸ, பிரிட்டன் ஜெர்மனி போன்ற
வல்லரசுகளின் எச்சிலை, அற்ப சலுகைகளுக்காக
வல்லநாயன்மேல் விசுவாசம் கொண்ட முஸ்லீம்கள்
இனிமேலாவது வல்லரசுகளுக்குப் பயப்படாமல்
இன்று, ஈராக்கை வளைந்து பயமுறுத்தியதுபோல்,
நாளை எகிப்து, லிபியா, சவுதி, ஈரான், என்றெல்லாம்
நாசதாரிகள் அடிமைப்படுத்தப் போரிடவந்தால்,
ஈராக்கிய வீரர்கள்போல் எதிர்த்து நில்லுங்கள்.
இஸ்லாமிய நாடுகளை வல்லரசுகள் இனிமேலும்
அடுத்துக் கெடுக்கவும், கோள்மூட்டிப் போரிடவும்
அமெரிக்க, வல்லரசு யூதநாடுகள் சதித்திட்டம்........
பொருளாதாரத் தடை என்றெல்லாம்
பேய்க்காட்டி வருவார்கள், பயப்படாதீர்கள்.
அண்ணல்நபி ஸல் எகூதிகளுக்கும் யூதருக்கும்
அல்லாவை விசுவாசிக்காத காரணத்தால் சபித்தல்லோ
மலைக் காடுகட்குள் விரட்டி ஒதுக்கினார்கள்
மமதைகொண்ட அமெரிக்க யூதருகள், இஸ்ரவேலரை
அரவணைத்து, இஸ்ரவேலை, தனிநாடாக்க முனைந்து



அரபுநாடுகள் அனைத்தையும் இஸ்ரவேலுடன் தினமும்
பகைவராக்கி, தந்திரோபாயம் செய்துதான்,
பலஸ்தீனியருக்குள் முஸ்லீம் உலகெல்லாம் கோள்மூட்டி
வல்லரசுகள் அரபுநாடுகளை அடிமைப்படுத்திப் பயங்காட்டி
வயிறார உண்டு கொழுத்து வருகின்றனர்.
உண்மையை உணருங்கள்.
உலக முஸ்லீம்நாடுகளே ஒன்றுகூடி
உத்தம நபிஸல் வழிவழியே வாருங்கள்!
நாரே தக்பீர் (எல்லோரும்) அல்லாஹு அக்பர்.

★ வஸ்ஸலாம் ★

---

# ஊர்பற்றி ஓராய்வு

"புலவர் மருதூர் - ஏ - மஜீத்"

"ஊர்" என்ற சொல் நாம் நினைப்பது போன்று தமிழ்ச் சொல் அல்ல, இது சுமேரிய மொழிச்சொல், சுமேரிய மொழி உலகின் முதல் நாகரிகமக்களான பபிலோனிய மக்களால் பேசப்பட்ட மொழியாகும். இதற்கு ஆதாரமாக பல சான்றுகளைக் கூறலாம்.

எழுதப்பட்ட மனிதவரலாறு இப்றாகிம்நபி (ஏப்ரஹாம்) அவர்களுடனேயே ஆரம்பமாகிறது. இவர் வாழ்ந்த காலம் கி. மு. 2000 ஆண்டளவில் எனக் கொள்ளப்படுகின்றது. இவர் பிறந்த இடம் "ஊர்" என்றும் வரலாறுகள் கூறுகின்றன. "ஊர்" என்ற சொல் பலகிராமங்களுக்குத் தலைமை தாங்கும் ஒரு இடத்தினைக் குறித்தும் கையாளப்பட்டுள்ளது. அதாவது, 'நகரம்' என்பதுவும் இதன் பொருளாகும்.

விவசாய நாகரிகம் கொஞ்சத் தூரம் நகர்ந்தது வியாபார நாகரிகமாக உருப்பெற்று வியாபாரமும் விவசாயமும் கலந்த ஒரு தன்மையோடு, உள்ள இடத்தினையும் "ஊர்" என்ற சொல் குறித்துள்ளது. சுமேரிய மொழி பேசிய மக்கள் இவர்களை (மத்திய கிழக்கு வாசிகள் என அழைப்பது கருத்துச் செறிவுள்ளதாக அமையும் என்பதினால் இனிமேல் அப்படிப்பாவிக்க விழைகிறேன்.) வியாபாரத்திற்காக அல்லது புனிதயாத்திரைக்காக பிரயாணத்தினை மேற்கொண்டு, அல்லது இடம் பெயர்ந்து எங்கெங்கு தங்கினார்களோ அந்த இடங்களை எல்லாம் "ஊர்" என அழைத்தனர். அன்றைய மத்தியகிழக்கு வாசிகளின் புனிதயாத்திரை, அல்லது வியாபாரப் பிரயாணம், அல்லது குடி இருப்பதற்கான இடப்பெயர்வு குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியான

இலங்கையின் ஆதம் மலை வரை உயர்ந்து பரந்து நீண்டிருந்தது.

இதனை வேறு ஒரு வகையாகக் கூறுவதாயின், இவர்களது பிரயாணம் பாரசீகத்திலிருந்து ஆப்கானிஸ்தானத்துக்குள் வந்து அங்கிருந்து பாக்கிஸ்தான் சென்று, அங்கிருந்து வங்காள தேசம் வந்தடைந்து அங்கிருந்து இலங்கைக்கும் தென் இந்தியாவுக்குள்ளும் சென்றது. இதற்குச் சான்றாகப் பின்வரும் ஊர்களைக் கூறமுடியும்.

ஈரான், ஈராக் பகுதியிலே இப்றாகிம் நபி பிறந்த இடமான 'ஊர்' பாரசீகத்தில் (ஈரான்) 'நிசாபூர்'. இந்த ஊரில்தான் கவிஞர் உமர் கய்யாம் அவர்கள் பிறந்தார்கள்.

ஆப்கானிஸ்தானில் 'ஜோயப்பூர்'
பாகிஸ்தானில் 'லாகூர்'
வங்காளதேசத்தில் 'டினாஜ்பூர்'
இலங்கையில் 'நல்லூர்'
இந்தியாவில் 'திருவிடைமருதூர்'
மலேசியாவில் 'கோலாலம்பூர்'
வட இந்தியாவில் 'சீதல்பூர்'
மலையாளத்தில் கோயம்புத்தூர்
துருக்கியில் 'ஷோர்க்பூர்'
கம்பூச்சியாவில் 'ஹங்கூர்'
சிங்கப்பூரில் 'சிங்கப்பூர்'

என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

தென்னிந்தியாவில் ஆதிச்ச நல்லூர் என்னுமிடத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் போது, கண்டெடுக்கப்பட்ட பொருட்களும் தகவல்களும் சான்றுகளும் உலகின் முதல் நாகரிகமான பபிலோனிய நாகரிகத்தையும், இரண்டாவது நாகரிகமான நைல் நதிக்கரை நாகரிகத்தையும் தொடர்புறுத்துவதற்கான சான்றுகளைக் கொண்டுள்ளதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

இந்த மூன்று நாகரிகத்தோடும், ஆதிச்ச நல்லூரோடும் தொடர்புடைய மத்திய கிழக்கு வாசிகள் இலங்கையில் முதன்முதலில் தரித்த இடம் மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ள இன்றைய 'மண்டூரே' எனக்கூறுவதற்கான சான்றுகளுள்ளன.

ஆரம்பத்தில் இது 'ஊர்' என்றே அழைக்கப்பட்டது. மத்திய கிழக்கு வாசிகள் தங்களின் தரிப்பிடத்தை இன்றைய சாய்ந்தமருதூருக்கு மாற்றிக் கொண்டபோது இது பண்டூராகியது (பழையஊர்). பின், நாளாவட்டத்தில் திரிபடைந்து மண்டூராகியது. இவர்களின் இரண்டாவது தரிப்பிடமான இன்றைய சாய்ந்த மருதூரும் ஆரம்பத்தில் 'ஊர்' என்றே அழைக்கப்பட்டது. பின் இது மருதூராகியது. சாய்ந்த மருதூராகியுள்ளது. கடைசியில் சாய்ந்தமருதூராகியுள்ளது.

மத்திய கிழக்கு வாசிகள் ஓய்வெடுத்து மகிழ்ந்த இடம் 'மகிழூர்' என்று அழைக்கப்பட்டது. ஊரோடுசேர்ந்து வருகின்ற திராவிடமொழிச் சேர்க்கைக் காரணம் மத்திய கிழக்கு வாசிகளோடு சேர்ந்துவந்த சேரநாட்டுத் திராவிடர்கள் காரணமாகும்.

உ + ம் — பண்டு + ஊர்
மருதூ + ஊர் — மகிழ்வு + ஊர்

மத்திய கிழக்கு வாசிகளோடு சேர்ந்து வந்த சேரநாட்டுத் திராவிடர்கள் மட்டக்களப்பிலேயே நிரந்தரமாகக் குடி இருக்க விரும்பினர். இதனை இங்கு வாழ்ந்த இயக்கரும் நாகரும் விரும்பவில்லை. அதனால் இரு பகுதியினர்க்குமிடையே சண்டை ஏற்பட்டது. மத்தியகிழக்கு



வாசிகள் மூலம் அறிந்த சேர மன்னன் தனது நாட்டு மக்களுக்கு உதவுமாறு மத்திய கிழக்கு வாசிகளைக் கேட்டுக் கொண்டான். இந்த வேண்டுகோளைச் சிரமேற்கொண்டு மத்தியகிழக்கு வாசிகள் இயக்கரோடும் நாகரோடும் சண்டை செய்து நாகரை இலங்கையின் வடபகுதிக்குத் துரத்தியடித்து விட்டனர்.

சிறிதுகால அமைதிக்குப்பின் மீண்டும் இயக்கருக்கும் திராவிடர்க்கும் சண்டை ஏற்படவே நிரந்த தீர்வொன்றைக்காணும் பொருட்டு மத்தியகிழக்கு வாசிகள் ஏறாவூரில் எல்லையிட்டு அதன் வடக்கே இயக்கரைத் துரத்திவிட்டு ஏறாவூரிலும், மருதூரிலும் தாங்கள் இருந்து கொண்டு இடைப்பட்ட பகுதியில் திராவிடரைக் குடியமர்த்தினர்

இதனால் திராவிடர் அச்சமின்றி சந்தோஷமாக வாழ வழி ஏற்பட்டது. இதனால் சந்தோசமடைந்த திராவிடர்கள் தங்களின் எழுகுடியில் இருந்தும் ஏழு பெண்களைத் தெரிந்து மத்தியகிழக்கு வாசிகளோடு வாழ்வதற்காக மணப்பெண்களாய் அனுப்பி வைத்தனர். அத்தோடு அவர்களுக்குச் சேவகம் செய்வதற்காக தங்களின் பதினெட்டுச் சாதிகளிலுமிருந்து, பள்ளர், பறயர், அம்பட்டர், வண்ணார், முக்குவர், நளவர், குயவர், சாண்டார் போன்ற பதினெட்டுச் சாதிகளிலும் இருந்து பதினெட்டுக் குடும்பங்களைத் தெரிந்தனுப்பி வைத்தனர்.

மருதூரிலே குடியான பெண்கள் வாழ அவர்களுக்குப் பக்கத்தில் தமிழ்க்குறிச்சி ஒன்றை ஒதுக்கி பதினெட்டுச் சாதியினரையும் குடியமர்த்தினர். மத்தியகிழக்கு வாசிகளான ஏழு கப்பல் தலைவர்கட்கும் தங்களின் குடிகளிலிருந்து ஏழு பெண்களைக் கொடுப்பதைப் பெரும்பாக்கியமாகக்கருதினர் திராவிடர்கள். பெண்களும், அழகிலும் வீரத்திலும் செல்வத்திலும் குறைவில்லாதவர்களான மத்திய கிழக்கு வாசிகளுக்கு வாழ்க்கைப்படுவதைப் பேறாகக் கருதினர். அதனால் மருதூர் செழிப்போடு தளைத்தோங்கியது.

இந்த மருதூருக்குப் பூகோளரீதியாக மூன்று முனைகள்.

1. கல்முனை
மருதூர்முனை - மருதமுனை
3 நெய்ப்பட்டிமுனை - நற்பட்டிமுனை; ஊரிலிருந்து (மருதூரிலிருந்து) மீன் பிடிப்பதற்காகவும், வியாபாரம் செய்வதற்காகவும் சென்றவர்கள் கல்முனையிலே தங்கினர். சேனைப்பயிர் செய்வதற்காகச் சென்றவர்கள் மருதூர் முனையிலே தங்கிவிட்டனர். விவசாயத்திற்காகவும் கால்நடை வளர்ப்பதற்காகவும் சென்றவர்கள் நெய்ப்பட்டிமுனையிலே தங்கிவிட்டனர்.

மருதூர் - கஜபாகுமன்னன் காலத்தில் கஜபாகுப்பற்று என அழைக்கப்பட்டது. கஜபாகு மன்னனின் அபிமானத்துக்குரிய மத்தியகிழக்கு வாசிகள் இங்கு வசித்ததும், கஜபாகு மன்னனின் பிரிய நண்பனான சேர நாட்டு மன்னனின் குடிகள் இங்கு வசித்ததும் கஜபாகு மன்னனின் பற்றிற்குக் காரணமாக இருந்தது. அதனால் கஜபாகு மன்னன் சேர நாட்டுக்கு. கண்ணகி விழாவிற்குச் சென்றிருந்தபோது, சேரமன்னனால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கண்ணகிச் சிலையை இலங்கையில் வேறு எந்த இடத்திலும் வையாது, மருதூரின் தெற்கிலே வைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WEB : http\\www.thamizham.net



கோவில் கட்டி அதனைப் பராமரிக்கக் குடிகளையும் அமர்த்தி. செலவினத்திற்காக காணியும் வழங்கி ஆதரித்து வந்தான். இதனால் தான் மருதூர் 'கஜபாகுபற்று' என்று அழைக்கப்படுகிறது:

பிரிட்டிசாரின் ஆட்சியிலே அக்கரைப்பற்று, நிந்தவூர்ப்பற்று சம்மாந்துறைப்பற்று, பாணமைப்பற்று எனப் பிரிவுகளாப் பிரிக்கப்பட்டபோது 'கரைவாகுப்பற்று' என்றும் பிரிக்கப்பட்டது.

கிறிஸ்துவுக்கு எத்தனையோ நூற்றாண்டுக்கு முன்பிருந்து கிறிஸ்துவுக்குப்பின் 20ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை மட்டக்களப்பிலே (மருதூருக்கும் - ஏறாவூருக்கும் இடைப்பட்டபகுதி) ஒருமயிழைசியேனும் வெடிப்பின்றி ஒற்றுமையா சந்தோசத்தோடு இருசமூகத்தவர்களும் சமாதானமாக வாழ்ந்து வரலாயினர்.

★ ★

# பணிகளைத் தொடர்க நெஞ்சே?

இலக்கியமணி செ. குணரெத்தினம்

★★★

உனக்கெதற்குப் பாகைவழக்கு; இனிவாழ்வில்
உனக்கெனக்கு எனுமுரிமைப் போரெதற்கு?
கணக்கெதற்கு காதல்வலை வீச்செதற்கு?
இணக்கமில்லா உறவெதற்கு தள்ளிப்போ போ!

★★

உனதுவழி இறங்கிவர ஒன்னாதென்னும்
துணைஎதற்கு தூக்கெறி; மனமேஉந்தன்
அமைதிவழி அவள்வருவாள் வலுவழி
இமைதிறந்து பாராமல் எழுகாவி!

★★

மரமொடிந்து விழுவதற்கும் அழுவமாயும்
இரக்கமனக் கவியுனக்கு; - இரக்கமில்லா
மனைவிமக்கள் மாரடிப்பு ஏன் எதற்கு?
வினைப்பயனென்றேன், சும்மா விழல்நடிப்பு!

★★

தனிமையிலே இனிமைகாணும் சக்திபெற்ற
கவியுனக்கு ஏன்கவலைச் சுமையடுக்கு?
மனைஎன்றும் மக்களென்றும் மாரடிக்கும்
மனிதகுலம் என்குலமா விட்டுத்தள்ளு.

★★

விட்டுவிடு! இவர்வழியில் விலகிநில்லு!
கெட்டுவிடா துன்வழியில் தொடர்ந்து செல்லு!
இப்படி நடக்குமெனப் பழமைபேசி
கெட்டு விடா துன்பணியைத் தொடர்கநெஞ்சே!

★★

'சமாதானம்' ஆசிரியர் மருதூர் வாணன் அவர்களால் மருதமுனை முனைப்பு அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ANTHONY JEEVA
EDITOR KOLUNDU
57, MAHINDA PLACE,
COLOMBO - 6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org